**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து பல்கலைகழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகம் தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்ானிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 29(ஆ) மற்றும் 21(ஊ) பிரிவுகளின் பிரகாரம் ரூபா 12,302,509,267 தொகையான குறுங்கால முதலீடுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 11,930,031 பெறுமதியான ஐக்கிய குடியரசு டொலர்களில் பேணப்பட்டு வருகின்ற நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபாவில் பேணப்பட்டு வருகின்ற ரூபா 363,478,006 மொத்தப் பெறுமதியான நிலையான வைப்புக்களும் ரூபா 1,157,534,667 தொகையான காசும் காசுக்குச் சமமானவைகளும் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,064,103,259 தொகையான ஐக்கிய குடியரசு டொலர் சேமிப்புக் கணக்குகளும் ரூபா 93,431,408 தொகையான ரூபாவிலான சேமிப்புக் கணக்குகளும் காணப்பட்ட போதிலும் அதற்கான விபரமான | குறுங்கால முதலீடுகளும் வங்கிக் கணக்குகளில் குறிப்பிடத்தக்க அளவான மீதிகளும் பேணப்பட்டு வருவதனால் அந்த கணக்குஇலக்கங்களைப் பிரசித்தப்படுத்துவதன் மூலம் இரகசியத்தன்மை தொடர்பாக தேவையற்ற ஆபத்துக்கள் உருவாகும். | இலங்கை பொதுதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 48 ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 141,420,431 தொகையான பெறவேண்டிய முற்பணங்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 25,974,068 செலவு மீதிகள் எதிரீடு செய்யப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | வகைப்படுத்தல் தவறினால் ஏற்பட்டது. சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 63(ஆ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக போதனா வைத்தியசாலை மற்றும் செட்ரோபொலிடன் கெம்பஸ் நிறுவனம் தொடர்பாக வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிறுவனங்களின் நிதி நிலைமையை பயன்படுத்துபவர்களின் வசதிக்காக தனித்தனியாக விபரமாக குறிப்பிடப்பட்டிருந்தும் கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்டவாறு சிக்கனத் தன்மையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 95(இ) பிரிவின் பிரகாரம் மீாய்வாண்டிற்கான மூலதன ஒதுக்கம் ரூபா 203,978,109 மற்றும் ஏனைய ஒதுக்கம் ரூபா 191,524,819 தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிட்ட மூலதன மற்றும் ஏனைய ஒதுக்கங்கள் தொடர்பான வெளிப்படுத்தல் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 14, 15 மற்றும் 16 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 150(ஆ) பிரிவின் பிரகாரம் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் தன்மை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் நிறுவன ரீதியான தகவல்களை வெளிப்படுத்தலின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டு நடவடிக்கைகளின் தன்மைகள் விசேடமாக எழுத்துமூலம் குறிப்பிடுதல் | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்படவில்லை. | |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 56 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 1,156,517,317 காசும் காசுக்குச் சமனானவைகளும் தொடர்பாக வெளிப்படுத்துதல் மற்றும் ஒப்பீடு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை. | குறுங்கால முதலீடுகள் மற்றும் வங்கி கணக்குகளில் குறிப்பிடத்தக்க அளவு மீதிகள் காணப்படுவதனால் மேற்கூறிய கணக்கு இலக்கங்களை பிரசித்தப்படுத்தலின் மூலம் இரகசியத்தன்மை தொடர்பாக தேவையற்ற ஆபத்து ஏற்படலாம். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 05 இன் 26(அ) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் 03 வங்கிக் கணக்குகளின் ஐக்கிய குடியரசு டொலர் 2,907,306.52 தொகையான இறுதி மீதியானது ஆண்டு இறுதி நாணயமாற்று வீதத்தில் பரிமாற்றம் செய்யப்படாமையின் காரணமாக ரூபா 16,286,441 ஆல் இலாபம் கூடுதல் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 06 நிலையான வைப்புக் கணக்குகளின் ஐக்கிய குடியரசு டொலர் 32,619,412 தொகையான இறுதி மீதிகள் ஆண்டின் இறுதி நாணயமாற்று வீதத்தில் பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ரூபா 182,730,690 ஆல் இலாபம் கூடுதல் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வெளிநாட்டு நாணய நிதி விடயங்களில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணய பணம் திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் விகிதாசாரத்தின் சராசரியினை ஈடுபடுத்தி பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதனால் இலாபம் கூடுதல் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 14(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் சுகாதார அமைச்சிடமிருந்தும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் அன்பளிப்புக்களாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 91 உபகரணங்களில் 81 உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவற்றில் 10 உபகரணங்கள் கணக்காய்வுத் திகதி வரை களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | | |
| (ஐ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 49ஆம் பிரிவின் பிரகாரம் தெற்கு மண்டபத்தின் 11 வாகனங்களில் ரூபா 5,099,200 தொகையான 07 வாகனங்கள் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. 11 வாகனங்களில் 04 வாகனங்கள் மாத்திரம் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருந்தும் 11 வாகனங்களினதும் தேறிய இயலளவுப் பெறுமதியினை கவனத்திற்கு எடுத்து மிள்மதிப்பு இலாபம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க ரூபா 1,568,047 தாக்கம் ஒதுக்கங்களுக்கு ஏற்பட்டிருந்தது. மெலும் பல்கலைக்கழக்கத்தின் ரூபா 74,601,130 பெறுமதியான 11 வாகனங்னகளும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,500,000 பெறுமதியான யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இரண்டு காணித் துண்டுகள் மற்றும் மெட்ரோ பொலிடன் கெம்பஸ்ஸின் ரூபா 16,054,366 கிரயமான கட்டிடங்களையும் ரூபா 4,279,691 தொகையான வாகனங்களையும் மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீள்மதிப்பு அறிக்கையில் ரூபா 3,800,000 கிரயமான 03 வாகனங்களுக்காக மீள்மதிப்பு பெறுமதி காட்டப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க அந்த வாகனங்களின் பெறுமதியும் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது. | மீள்மதிப்புச் செய்வதற்கு அத்தியவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததனால் மதிப்பீட்டாளரினால் மேற்கூறிய கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் காணிகளின் மீள்மதிப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 52 ஆம் பிரிவிற்கு முரணாக இரத்மலானை பல்கலைக்கழகத்தின் வாகனங்களை மீள்மதிப்புச் செய்ததன் பின்னர் மீள்மதிப்பு இல்லாபத்தினை கணிப்பீடு செய்த போது மீள்மதிப்பு ஒதுக்க கணக்கில் முன்னைய ஆண்டின் போது வாகனங்களின் மீள்மதிப்பிலிருந்து உருவாகியிருந்த ரூபா 43,586,522 தொகையான மீள்மதிப்பு இலாபம் 02 சந்தர்ப்பங்களின் போது குறைத்து மீளாய்வாண்டிற்கான வாகன மீள்மதிப்பிலிருந்து உருவாகிய இலாபம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது நிதிநிலைமைக் கூற்றிலும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றிலும் மீள்மதிப்பு ஒதுக்கம் ரூபா 87,173,044 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் 2.2.4 ஆம் பந்திக்கு இணங்க இருப்புக்களை கணக்குவைக்கும் போது கிரயம் அல்லது நிகர தேறிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு பெறுமதியிடப்பட்டது என காட்டப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 101,017,561 தொகையான மருத்துவ வழங்கல் இருப்பினுள் ரூபா 10,216,967 பெறுமதியான காலாவதியான இருப்புக்கள் காணப்பட்டதுடன் அது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 9 இன் 38 ஆம் பிரிவிற்கு இணங்கியதாக இல்லாமையினால் இருப்பு ரூபா | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |

10,216,967 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியின் சுயநிதி நிதியத்தின் வங்கிக் கணக்கிணக்க கூற்றில் ரூபா 2,674,015 தொகையான இனங்காணப்படாத செலவுகள் மீதி காணப்பட்டதுடன் அச்செலவுகள் உரிய பேரேட்டுக் கணக்குகளில் பதியப்படாமையின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் ரூபா 2,674,015 ஆல் இலாபத்தை அதிகரித்துக் காட்டியிருந்தது. | ரூபா 2,674,015 ஆன இனங்காணப்படாத செலவுகள் பின்னிணைப்பு ''அ'' இல் காட்டப்பட்டவாறு சரியாக இனங்காணப்பட்டு உரிய கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | செலவுகளை இனங்கண்டு கணக்குளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 3,130,415 கிடைக்க வேண்டிய அச்சிடல் வருமானத்தில் ரூபா 698,598 வருமானம் 2022 சனவரி 07 ஆந் திகதி நிறுவனத்திற்கு கிடைத்திருந்தும் அந்த வருமானம் பெறவேண்டிய கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாது மீண்டும் வருமானத்திற்கு செலவு வைத்ததனூடாக மீய்வாண்டிற்கான இலாபம் ரூபா 698,598 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை இனங்கண்டு கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கல்வி நடவடிக்கைகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து உரிய உடன்படிக்கையின் 3(g) பந்தியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய உணவு மற்றும் தங்குமிட கட்டணத்திற்காக அறவிடப்பட வேண்டிய பணம் உரிய மாத இறுதிக்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய போதிலும் 05 கற்கைநெறிகள் தொடர்பாக ஐந்து மாணவர்களிடமிருந்து ஐக்கிய குடியரசு டொலர் 7,052.39 தொகையானது கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அறவீடு செய்ய | அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர் 7,052.39 பெறுமதி இன்னும் இனங்காணமுடியாத பெறுமதியினை இனங்கண்டு அப்பணத்தை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சில் ஒரு குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெறவேண்டிய மீதிகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அக்கடன் மீதியை தாமதமின்றி அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்ததுடன் இப்பணம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2021 மார்ச் 11 ஆந் திகதியிலிருந்து 2023 ஏப்ரல் 24 ஆந் திகதி வரை வழங்கப்படாதிருந்த போதிலும் பணம் செலுத்தப்படாதிருந்த ரூபா 216,253,061 பெறுமதியான 09 மருத்துவ உபகரண விடயங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மருத்துவ உபகரணங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 13,589,319 பெறுமதியான மருந்துகள் ஏனைய வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக கணக்குகளில் எந்தப் பதிவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புக்களைத் திருப்பி அனுப்பும் போது கணக்குளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | போக்குவரத்துப் பிரிவு வழங்கிய பட்டோலைகளுக்கு இணங்க பல்கலைக்கழகத்தில் 69 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் மீள்மதிப்பு அறிக்கைக்கு இணங்க 55 வாகனங்களுக்கு மாத்திரம் மீள்மதிப்பு செய்யப்பட்டிருந்தது. அந்த 55 வாகனங்களுக்கு மத்தியில் 3 வாகனங்கள் போக்குவரத்துப் பிரிவினால் வழங்கிய பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்புக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததனால் மதிப்பீட்டாளரினால் மேற்கூறிய கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்ட வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்காத துடன் பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்யும் போது அனைத்து வாகனங்களும் மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டியதுடன் பட்டோலை மற்றும் மீள்மதிப்பு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட வாகனங்களின் விபரம் செம்மையாக்கப்படுதல் வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| விடயம் | நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க பெறுமதி<br>ரூபா | துணை அறிக்கைகளுக்கு இணங்க பெறுமதி<br>ரூபா | வித்தியாசம்<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| முற்பணம் | 54,121,219 | 7,726,291 | 53,348,590 | பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்று மீதிகளை துணை அறிக்கைகளுடன் கணக்கிணக்கம் செய்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அச்சகப் பிரிவில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,431,817 தொகையான பெறவேண்டிய மீதிகள் 02 ஆண்டுகளுக்கும் 07 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 219,672,408 தொகையான நிலுவையான கற்கைநெறி கட்டண மீதி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகவும் 2020 ஆம் ஆண்டில் ரூபா 26,780,000 தொகையும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 18,041,500 தொகையுமான பட்டப்பின் படிப்பு பிரிவின் பெறவேண்டிய கற்கை நெறிக் கட்டணத்தையும் கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 03 அந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 88,331,021 முற்பணங்கள் 01 மாதத்திற்கும் 09 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 125,941,615 செலுத்த வேண்டிய மீதியினுள் 03 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைமையான மொத்தமாக ரூபா 35,639,977 தொகையான கடன் கொடுத்தொர் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் 27 ஆம் இலக்க மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல அரசாங்க பாதுகாப்பு பயிற்சி நிறுவன அதிகாரச் சட்டம் | 2011 ஆம் ஆண்டிலிருந்து கெடட் உத்தியோகத்தர்கள் அல்லது அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்லாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு பணம் செலுத்தும் அடிப்படையில் பட்டப்படிப்பினை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 31 பட்டப் படிப்பு கற்கை நெறிகளுக்கு மத்தியில் 11 பட்டப்படிப்பு கற்கை நெறிகளானது கடெட் உத்தியோகத்தர்கள் அல்லாத/ பணக் கொடுப்பனவு அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 2018 மார்ச் 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல், நிருவாக சபையின் தீர்மானத்தின் செல்லுபடியாகும் தன்மை | வரைபாக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனமானது 2023-04-21 ஆந் தகதி பாதகாப்பு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது . | 2018 மார்ச் 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் தீர்மானத்திற்கு இணங்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட செயற்பாடுகளை துரிதமாக மேற்கொளளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக பல்கலைக்கழகத்திற்குப் பொருத்தமானதாக ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தினை திருத்தம் செய்யுமாறு தெரியப்படுத்தியிருந்தும் மீளாய்வாண்டின் போதும் அதிகாரச்சட்டத்தினை திருத்தும் செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது 06 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்த ஐக்கிய குடியரசு டொலர் 32,619,412 இற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடும் உரிய அமைச்சரின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று இப்பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | (i) நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் 37 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 7,726,291 முற்பணத்தை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதுவரை 10 நாட்களிலிருந்து 06 மாதங்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | பின்னர் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | (ii) நிதிப்பிரமாணம் 371(2)(அ) பிரிவிற்கு முரணாக பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டில் 55 சந்தர்ப்பங்களின் போது எல்லையினை | பின்னர் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மிகைத்து மொத்தமாக ரூபா 18,777,100 முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள், சேதங்கள் பதிவேடு பல்கலைக்கழகத்திடம் இருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நிதிப்பிரமாணம் 570 | பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையினை நிர்மாணிப்பது தொடர்பாக நிறுத்திவைக்கப்பட்ட ஒப்பந்த நிறுத்திவைத்தல் பணம் ரூபா 76,879,769 ஆக இருந்ததுடன் அச்செயற்திட்டத்தினை முடிவுறுத்தி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக அப்பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நிபி/கொபாபவை/PC/58/2021(04) ஆம் இலக்க 2021 செப்தெம்பர் 28 ஆந் தகிதிய நிறைவேற்று பணிப்பாளரின் உள்ளக சுற்றறிக்கை | வைத்தியசாலையில் தனியார் துறைக்கான கொடுப்பனவுகளை முறைமைப்படுத்துவதற்காக விரல் அடையாளமிடும் இயந்திரங்களின் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்ததல் அத்தியவசியமானது என வலியுறுத்தப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அதற்கிணங்க மேலதிக நேர வேலைப்படி செலுத்துவது சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாடு முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுக்கான உள்ளகக் கட்டுப்பாட்டினை முறைமைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 வரித்தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகமானது வரிக் கடப்பாடுகளுடனான ஒரு அரசாங்க தொழில் முயற்சியாக கணக்காய்வுத் திகதிவரை செயற்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 82,991,812 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 88,166,939 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 5,175,127 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த மீண்டுவரும் மானியம் குறைவடைந்தமையும் ஆளணி வேதனம் அதிகரித்தமையும் பிரதான காணரமாக இருந்தது.

### 2.2. பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13.78 சதவீதத்தினால் அதாவது ரூபா 1,491,504,592 ஆல் அதிகரித்திருந்த போதிலும் பிரதான வருமான மூலமாகிய வைத்தியசாலை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 34.41 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வருமானம் குறைவடைந்தமைக்கு நானாவித வருமானம் குறைவடைந்தமை காரணமாக இருந்ததுடன் நானாவித வருமானங்களுக்கு மத்தியில் ஹோட்டல் வருமானம் 93.32 சதவீதத்தால் அதாவத ரூபா 19,567,129 ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12,72 சதவீதத்தால் அதாவது ரூபா 793,708,019 ஆல் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆளணி வேதனம், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவை செலவுகள் மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவுகள் அதிகரித்தல் காரணமாக இருந்ததுடன் அந்த அதிகரிப்பு முறையே 15.86, 33.96 மற்றும் 60.01 தசவீதமாகும். உடன்படிக்கை செய்த சேவை செலவுகளுக்கு மத்தியில் உத்தியோகபூர்வ உபசரிப்பு செலவுகள் 165.3 சதவீத்ததால் அதாவது ரூபா 19,058,383 ஆலும் ஏனைய மீண்டுவரும் செலவுகளுக்கு மத்தியில் சிகிச்சை செலவுகள் 274.60 சதவீதத்தால் அதாவது ரூபா 65,301,209 ஆலும் பரீட்சை கட்டண செலவுகள் 174 தசவீத்தாலும் அதாவது ரூபா 35,881,176 ஆலும் நானாவித செலவுகள் 327.29 தசவீத்தினாலும் அதாவது ரூபா 30,282,704 இனாலும் வெளியீடுகள், நலன்புரி மற்றும் பாதுகாப்புச் செலவுகள் 318.87 சதவீத்தினாலும் அதாவது ரூபா 30,966,705 இனாலும் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டில் 1.86 சதவீதமான உரிமை மூலதனம் மீதான பிரதிபலன் விகிதம் மீளாய்வாண்டின் போது 0.3 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் இலாபம் உழைத்தல் இன்னும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டில் 3.21:1 ஆன நடைமுறை விகிதம் மீளாய்வாண்டின் போது 2.7:1 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது உரிமை மூலதனம் மீதான கடன் விகிதம் 4.13:1 ஆக இருந்ததுடன் மிளாய்வாண்டின் போது அது 0.76:1 வரை குறைவடைந்திருந்த போதிலும் அந்த குறைவடைதலுக்காக பல்கலைக்கழகத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும்

வாகனங்களின் மீளமதிப்பின் மூலம் மீள்மதிப்பு ஒதுக்கம் அதிகரித்திருந்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வைத்தியசாலையினால் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்திற்காக செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணத்தை உரிய காலத்தில் செலுத்துவதற்கு வைத்தியசாலையின் முகாமைத்துவம் தவறியதன் காணரமாக 2022 ஆம் ஆண்டில் மின்சாரப் பட்டியல்களுக்காக ரூபா 26,143,639 தண்டப் பணத்தினை வைத்தியசாலை செலுத்த வேண்டியிருந்ததுடன் அத்தொகையால் வைத்தியசாலைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மின்சாரப் பட்டியல்களை தாமதமின்றி தீர்த்துவைப்பதன் மூலம் நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டத்தை குறைைத்துக்கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 21.5815 ஹெக்டேயர் அளவான காணியில் பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அக்காணியின் சட்டரீதியான உரிமை ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அக்காணியில் நிர்மாணிக்கப்பட்ட போதனா வைத்தியசாலையின் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 45,385,484,229 ஆக இருந்ததுடன் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,216,884,293 கிரயமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் நிர்மாணங்கள் முடிவடைந்து 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உரிய காணியை பெற்றுக்கொள்ளும் செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை. | வரைபில் குறிப்பிட்ட விடயங்களுக்கு இணங்க பல்கலைக்கழகத்திடம் ஒரு அம்புலன்ஸ் இல்லாது மூன்று அம்புலன்ஸ்கள் காணப்படுகின்றன. | காணியை பொறுப்பேற்பதனை துரிதமாக முடிவுறுத்துதல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக போதனா வைத்தியசாலைக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத மாணவர்களிடமிருந்து பிணைகளை அறவீடு |

| | | |
|---|---|---|
| 6(அ) மற்றும்(ஆ) பிரிவுகளுக்கு முரணாக பல்கலைக்கழகத்தின் மாணவர்களும் 125 பதவியணியினர்களும் அச்சேவையை கைவிட்டிருந்தனர். மேலும் இது தொடர்பாக 1998/99 கல்வி ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ரூபா 83,928,395 பெறுமதியான பிணைமுறிகளை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 நிதியத்தின் குறைந்த பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதனாவைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக தேசிய சேமிப்பு வங்கியினால் அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர் 201,629,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. அக்கடன் பணத்தில் ஐக்கிய குடியரசு டொலர் 180,143,872.11 பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 21,485,127.81 பணம் அதாவது ரூபா 7,467,476,280 பணம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியத்தினை செயற்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 161,624,484 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் பயன்படுத்தப்படாது வைத்திருக்கப்பட்டன. மேலும் 2022 மே மாத்திலிருந்து போதனா வைத்தியசாலையின் 07 ஆம் இலக்க வாட்டு மற்றும் 03 தீவிர சிகிச்சை பிரிவுகளை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வது நிறுத்தப்பட்டிருந்ததனால் அந்த வாட்டில் காணப்பட்ட ரூபா 212,456,698 பெறுமதியான | மருத்துவ உபகரணங்களை திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் மற்றும் மீண்டும் மருந்துவர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்கையில் இந்த உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படு | கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்கள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது. அதற்கிணங்க விளைவற்றுக் காணப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 374,081,182 ஆகும். | ம். | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதனா வைத்தியசாலையை நிர்மாணிக்கும் போது 56 பிரிவுகள் தொடர்பாக ஆய்வுகூட பரிசோதனைப் பொருட்கள் மற்றும் அறிக்கைகளை எடுத்துச் செல்லும் குறிக்கோளில் ஐக்கிய குடியரசு டொலர் 530,000 செலவு செய்து வாயு குழாய் முறைமை (Pneumatic Tube System) ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டிற்காக 56 பிரிவுகளில் 47 பிரிவுகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 24 பிரிவுகளுக்கான தரவுகளை எடுத்துச் செல்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததானது 2 இற்கும் 100 இற்கும் இடைப்பட்ட குறைந்த அளவான தரவுகள் என்பது அவதானிக்கப்பட்டது. | தற்பொழுது இந்த முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தியவசியமாகக் காணப்பட்ட மென்பொருள் மற்றும் நுண்அறிவுள்ளவர்கள் (Skillfull) பதவியணியில் இல்லாததனால் இந்த முறைமையின் சிறந்த செயலாற்றல் மற்றும் நிலைத்திருத்தலுக்காக மேலதிக பராமரிப்பு நடவடிக்கைகள் அந்த உள்நாட்டு முகவர் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அச்செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. | வாயு குழாய் முறைமையானது உச்ச அளவு இயலளவில் வைத்தியசாலை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.6 செயற்திட்ட அல்லது மூலதன வேலை தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 சனவரி 24 ஆந் திகதி பாதகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் Amrita Technologies மற்றும் Thinkcube Systems கம்பனியுடன் கொத்தலாவல பர்துகாப்பு பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையில் ஐக்கிய குடியரசு டொலர் 1,300,334.21 செலவு செய்து சுகாதார தகவல் முறைமையை ஸ்தாபிப்பதற்காக முத்தரப்பு உடன்படிக்கையினை மேற்கொண்டிருந்தது. உடன்படிக்கைக்கு இணங்க இந்த முறைமை 2023 பெப்ரவரி 24 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2023 மே 31 | தொடக்க கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு ஏற்பட்ட தாமதம் செயற்திட்டத்தினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட் கால எல்லையினை விட தாமதமடைவதற்கு தாக்கமளித்துள்ளதுடன் அத்தாமதம் செயற்திட்டம் முழுவதும் இன்னும் தாக்கமளித்துள்ளது. | திட்டமிடப்பட்டவாறு முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆந் திகதி வரையும் இந்த முறைமையை ஸ்தாபிக்கும் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**3.7 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 1120 சீமெந்து மூடைகளை ரூபா 2,982,011 தொகைக்கு கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைகள் 03 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால் உரிய வழங்கலின் மொத்த பெறுமதியின் அடிப்படையில் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவிற்கு இணங்க பிரதான கேள்விச் சபைக்குச் சமர்ப்பித்தல் தவிர்க்கப்பட்டிருந்தது. மேலும் வழிகாட்டிக் கோவையின் 5.4.10, 5.3.11 மற்றும் 8.9.1 பிரிவுகளுக்கு இணங்க இக்கொள்வனவுகளுக்காக முறைப்படியாக செயலாற்றல் பிணைமுறி, கேள்வி பாதுகாப்பு பணத்தினை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் முறையான உடன்படிக்கையினை மேற்கொள்ளுதல் ஆகிய தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கேள்வியினை பெற்றுக்கொள்ளும் சிக்கலான நிலைமையின் அடிப்படையில் செயலாற்றல் பிணை, கேள்விப் பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளுதலும் உடன்படிக்கை செய்து கொள்ளலினையும் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | பெறுகை வஷழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 01-41/2019 ஆம் இலக்க மற்றும் 2019.07.22 ஆம் திகதிய சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மருந்தகங்களில் மட்டுமே அவசரகால மருத்துவப் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும், மருந்துகள் கிடைக்காத பட்சத்தில் எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே, பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் , | எதிர்காலத்தில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கணக்காய்வு மாதிரிப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா. 3,053,808 பெறுமதியான மருந்துகளை கொள்வனவு செய்தபோது அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மருந்தகங்களில் காணப்பட்டதா என்பதற்கான எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை.